# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar)
Preliminary Register) C.C.No.792/2019
Sessions)

( Prosecution P.W.11
Deposition of witness for (Defence
(Court

| | | | |
|---|---|---|---|
| Name | ரமேஷ் | -- | |
| Father's Name | பால்ச்சாமி | Calling | சார்பு ஆய்வாளர் |
| Village | கல்லல் | Religion | |
| Taluk | | Age | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 18th Day of May 2026..

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்பொழுது கல்லல் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு நான் மம்சாபுரம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வந்தபோது 09.06.2019 ம் தேதி 16.00 மணிக்கு தலைமைக் காவலர் பாண்டியராஜன் என்பவர் ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலைப் பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த காளிமுத்து மகன் கோவிந்தன் என்பவரிடம் விசாரணை செய்த போது அவர் கொடுத்த வாக்குமூலத்தை பதிவு செய்து அவருக்கு படித்துக் காண்பித்து அவரது இடது கை பெருவிரல் ரேகையினைப் பெற்று அதற்கு சாட்சியாக அவரது மகன் வைரவன் என்பவரிடம் அறிவேன் சாட்சி கையொப்பம் பெற்று 18.00 மணிக்கு நிலையம் வந்து நிலைய குற்ற எண்.90/2019 ன்படி இந்திய தண்டனை சட்டம் பிரிவு 279, 337 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அதன் அசலை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.II, ஸ்ரீவில்லிபுத்தூர் அவர்களுக்கு அனுப்பியும், ஒரு நகலினை எனது மேல் விசாரணைக்கும் வைத்தார். அவ்வழக்கினை நான் எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினம் 18.45 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பண்ணையார், சிலம்பரசன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை சார்ஜர் எமெர்ஜென்ஸி லைட் உதவியுடன் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். மாதிரி வரைபடம் அ.சா.ஆ.10 பின்னர் சாட்சிகள் கோவிந்தன், மனோஜ்குமார், கோபி, முத்தம்மாள், பண்ணையார், சிலம்பரசன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கின் புகார் மனுவில் அறிவேன் சாட்சி கையொப்பம் செய்த வைரவன் என்பவரிடம் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 10.06.2019 ம் தேதி மாலை 10.00 மணிக்கு நிலையத்தில் ஆஜரான எதிரி சிவா என்பவரை கைது செய்து

சட்டவிதிகளின்படி ஜாமீனில் விடுவித்தேன். இவ்வழக்கில் சிகிச்சையில் இருந்த கோவிந்தன் என்பவர் 28.06.2019 ம் தேதி சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதால் வழக்கின் சட்டப்பிரிவை 279, 304(A) இ.த.ச. ன் கீழ் மாற்றம் செய்து காவல் ஆய்வாளர் அவர்களிடம் தெரிவித்தேன். சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.11. பின்னர் இவ்வழக்கில் இறந்துபோன கோவிந்தன் என்பவரின் பிரேதத்தை 10.00 மணிக்கு பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேத விசாரணை அறிக்கை தயாரித்தேன். பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.12. பின்னர் இறப்பிற்கான காரணம் அறியும் பொருட்டு பிரேத பரிசோதனை மேற்கொள்ள முதல் நிலைக் காவலர் மணிகண்டன் என்பவரிடம் ஒப்படைத்தேன். பிரேத பரிசோதனை முடிந்த பின்னர் அவரது மகன் வைரவன் வசம் ஒப்படைக்கப்பட்டது. இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட சாட்சிகள் வைரவன், கோபி, மனோஜ்குமார், முத்தம்மாள் ஆகியோர்களிடம் விசாரணை செய்து மறுவாக்குமூலம் பெற்றேன். இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட TN-84.F8418 என்ற TATA ACE வாகனத்தை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் கார்த்திகேயன் என்பவரை விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்து, மோட்டார் வாகன ஆய்வு அறிக்கையைப் பெற்றேன். மேற்படி வாகனத்தின் உரிமையாளர் முத்துக்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்த தலைமைக் காவலர் பாண்டியராஜ் என்பவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும் இத்துடன் எனது புலன் விசாரணையை முடித்தும் மேல் விசாரணைக்காக ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

முதல் தகவல் அறிக்கை சுமார் 12 மணி நேரம் காலதாமதமாக பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். இடைப்பட்ட காலத்தில் சம்பவம் சம்பந்தமாக எங்கள் காவல் நிலையத்திற்கு எந்தத் தகவலும் வரவில்லை என்றால் சரியல்ல, 16.00 மணிக்கு காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்து வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகாரைத் தலைமைக் காவலர் எழுதினார். புகாரில் காயம் பட்ட நபரின் இடது கால் தொடையில் மட்டும் காயம் பட்டதாகச் சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வழக்கின் பிரேத விசாரணை அறிக்கை நான்தான் தயாரித்தேன். பிரேத விசாரணை அறிக்கையில் காயம் பட்ட நபரின் இடுப்பில் காயம் பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றும், தொடையில் காயம் இருந்ததாக சொல்லப்படவில்லை என்றும் சொன்னால் சரிதான், ஆனால் இடுப்பில் மருத்துவக் காயத்துடன் இருந்தார். புகாரில் இடுப்பில் காயம் இருந்ததாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகே உள்ள வீடு மற்றும் கடையில் உள்ளவர்களை சாட்சிகளாக விசாரித்தேனா என்றால் விசாரிக்கவில்லை. சம்பவ இடத்திற்கு அருகே உள்ள நபர்களை பார்வை மகஜர் சாட்சிகளாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான், ஆனால் அவர்கள் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள். வரைபடத்தில் பாண்டியன் குடோனுக்கு முன்பு சம்பவம் நடந்ததாகக் காட்டப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். பார்வை மகஜர் காவல் நிலையத்தில் வைத்து டைப் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. விபத்து சம்பந்தப்பட்ட

வாகனத்திற்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த சாலை கரடுமுரடான சாலை என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு முன்பு இரு தெருக்கள் செல்கிறது என்றால் சரிதான். சம்பவ சாலை சுமார் 15 அடி அகலம் இருக்கும். சம்பவ சமயத்தில் காயம்பட்ட நபர் வடக்கிலிருந்து தெற்காக நடந்து சென்றார். வாகனம் பின்னால் இருந்து வந்ததால் புகார்தாரர் வாகனம் சம்பந்தமாகவும் அது வந்த விதம் பற்றியும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல. சம்பவ இடத்தில் காயம் பட்ட நபரை தூக்கிய கோபி, மனோஜ்குமார் தவிர மற்றும் பல பேர் யார் என்று கேட்டால் அது பற்றி நான் விசாரிக்கவில்லை. மோதியதால் காயம் பட்ட நபர் தள்ளிச் சென்று விழுந்ததாக சொல்லப்படவில்லை என்றால் அங்கேயே விழுந்தார். புகார்தாரருக்கு எதிரியின் பெயர் விபரம் எப்படி தெரியும் என்று நான் விசாரித்தேனா என்றால் அக்கம்பக்கதில் விசாரித்து தெரிந்து கொண்டதாகச் சொன்னார். விபத்து நடந்த உடனே புகார்தாரரின் மகன் சம்பவ இடத்திற்கு வந்து விட்டார் என்றால் சரிதான். எதிரி அதுவரையில் அங்கேயே இருந்தாரா என்றால் அதைப் பற்றித் தெரியாது. சம்பவம் பற்றி மருத்துவமனையில் இருந்து சுமார் 12 மணி நேரம் கழித்து தான் தகவல் கிடைத்தது என்று சொன்னால் சரியல்ல, அன்று மாலை 04.00 மணிக்கு தகவல் கிடைத்தது. எதிரியை 10.06.2019 அன்று கைது செய்தேன், அதுவரை எதிரியும் சம்பந்தப்பட்ட வாகனமும் எங்கு இருந்தது என்றால் வாகனம் காவல்நிலையத்தில் இருந்தது எதிரி தலைமறைவாகிவிட்டார். வாகனத்தை காவல் நிலையத்தில் காவலர்கள் ஒப்படைத்தனர். சம்பவ வரைபடத்தில் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட வாகனம் இருந்ததாக காட்டப்படவில்லை என்றால் சரிதான். வாகனம் சம்பவத்தில் சம்பந்தப்பட்டிருந்தால் அதை வரைபடத்தில் காட்டி இருப்பேன் என்றால் சரியல்ல. 05.07.2019 ம் தேதி வாகனத்தின் உரிமையாளரை விசாரிக்கும் வரை வாகனத்தின் உரிமையாளர் யார் என்று எங்களுக்குத் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும் சரிவர புலன் விசாரணை செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எதிரி முத்துக்குமார் என்பவரிடம் வேலை பார்க்கவோ சம்பவத்தன்று வாகனத்தை ஓட்டவோ இல்லை என்று சொன்னால் சரியல்ல, சம்பவத்திற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

<u>**மறு விசாரணை**</u> இல்லை.

மேற்படி சாட்சியமானது வீடியோ கான்பரன்சிங் முறையில் பதிவு செய்யப்பட்டது.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

R V RAJA KUMAR

Digitally signed by R V RAJA KUMAR

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**